**செய்தி வெளியீடு எண் : 1336** **நாள் : 02.09.2024**

**'பார்முலா4 சென்னை' கார் பந்தயத்தை மாபெரும் வெற்றியடையச் செய்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச் சேர்ந்த அனைவரையும் பாராட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளங்களில் பதிவு**

'பார்முலா4 சென்னை' கார் பந்தயத்தை மாபெரும் வெற்றியடையச் செய்த மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச் சேர்ந்த அனைவருக்கும் எனது பாராட்டுகள்.

செஸ் ஒலிம்பியாட், சென்னை ஓபன் 2023 டென்னிஸ் தொடர், ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி 2023, பன்னாட்டு அலைச்சறுக்குப் போட்டி 2023, ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2023 மற்றும் கேலோ இந்தியா 2023 ஆகியவற்றின் வெற்றிகளைத் தொடர்ந்து, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுக்கான சிறப்பான வளர்ச்சிப்பாதையை அமைத்து வருகிறது.

உலகத் தரத்திலான வசதிகள், உத்திமிகுந்த முதலீடுகள் ஆகியவற்றின் வாயிலாக நாம் வெறுமனே தொடர்களை மட்டும் நடத்திக்காட்டவில்லை, இந்திய விளையாட்டுத்துறை வளர்ச்சியின் முன்னோடியாக விளங்கி வருகிறோம். அதனால்தான் இந்திய ஒலிம்பிக் அணியிலும் தமிழ்நாடு தனிச்சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

எல்லைகளைத் தொடர்ந்து விரிவடையச் செய்வோம், 'இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரம் தமிழ்நாடு' எனும் பெருமையை உறுதியாகத் தக்கவைப்போம்!

Huge applause to Hon'ble Thiru. udhayanidhi stalin and the entire team for making Formula4Chennai a roaring success!

Building on the victories of ChessOlympiad, ChennaiOpen2023
AsianChampionsTrophy2023
TamilNaduInternationalSurfOpen2023
SquashWorldCup2023 and KheloIndia, Tamil Nadu is blazing a trail in sports excellence. With world-class facilities and strategic investments, we're not just hosting events–we're pioneering the future of Indian sports. That's why Tamil Nadu has a significant presence in India's Olympic contingent.

Let's continue pushing the limits and cement Tamil Nadu's legacy as the 'Sports Capital of India'!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu